முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஔவையார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.02.2019, வியாழக்கிழமை

1. **கனிவேலவன் மகா சக்தியே**
   **கனிவுமிக்க மா தவசியே**
   **இனிமையான உபதேசமருளி**
   **எளியவகை ஞானம் விதைத்து அருளும்**
2. அருளும் குருவே அரங்கனே
   அண்ணலே உன் வழி மக்கள் வர
   இருளும் மருளும் நிலைகள் விலகி
   ஏற்றம் காண்பர் என்று கூறி
3. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
   குறையிலா **விளம்பி சால் திங்கள்**
   **தெரியவே நவதிகதி குரு வாரம்**
   **(விளம்பி வருடம் மாசி மாதம் 9ம் நாள் 21.02.2019, வியாழக்கிழமை)**
   **தேசிகனுக்கு ஔவையார் யானும்**
4. யானும் உலக மக்கள் நலமுற உரைப்பேன்
   உயர் ஞானமே அரங்கன் ஞானம்
   தானதருமம் இணைந்த வழி காட்டல்
   தரணியில் வேறெங்கும் இல்லையப்பா
5. அப்பனே தருமம் காக்க வைத்திட
   அழைப்பு தந்து பூசை நடத்தி
   காப்பு தருகின்ற அரங்கனே
   காண்கிலேன் வேறெங்கும் இவை போல் குருவை
6. குருவென்று அரங்கன் அன்பில்
   குடையில் இருக்கும் சீடர்களே
   குருவின் எளிமைதனை கண்டு
   குறைவான எண்ணம் கொண்டு
7. கொண்டுமே அலட்சியப்படுத்தி
   குருராசன் வழியான தேற்றம்
   கண்டிடா முடங்கி விடாதீர்
   கணக்காய் அரங்கமகான் வேலையை
8. வேலையை ஆறுமுகப் பெருமானே
   வினவிட தொண்டர்களை நோக்கி
   அழைப்பு கூட்டி அருள்புரிய
   அவசியம் நித்ய பூசையோடு

9. பூசையோடு அன்னதானம் வழி
பொருளுதவி செய்து கொண்டு
நேசமுடன் தொண்டுகள் வழி
நிதி வசூல் வழி நேர்மைபட நடந்து

10. நடந்துமே அரங்கன் வருகையின்
நோக்கம் வெற்றி காணும்படி
தடையற தொண்டர்கள் செயல்பட
தருமபலம் கூடிட அரங்க ஞானி

11. ஞானியரின் தேடல் வழி சீடர்கள்
நம்பகம் கூடிட வருமுலகில்
ஞானிகள் ஆவீர் வரும் சீடர்கள் தானும்
நாட்டிவந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஔவையார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் மகாசக்தி வடிவமே எல்லையில்லாது கனிவு கொண்டிட்ட மகாதவசியே மக்களுக்கு இனிமையான உபதேசத்தினை அருளி கடுமையான யோகஞான பயிற்சிகளையும் மக்கள் கடைப்பிடித்திட ஏதுவாக தர்மத்தின் பக்தியின் அடிப்படையினால் ஆகிய வகையிலே எளிய வகை ஞானத்தினை மக்களிடத்து விதைத்து அவர்களை வழிநடத்தி அருள் செய்கின்ற ஞானகுருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அண்ணலே அற்புதமான உமது ஞானவழிதனிலே மக்களெல்லாம் வருகையுற அவர்களை அண்டிய மாய இருளாகிய அறியாமையும் மருளும் நிலையான அச்சமும் விலகி வாழ்வினிலே நல்ல பல முன்னேற்றங்களை காண்பார்கள் என்று உலகோர்க்கு எடுத்துக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 9ம் நாள் 21.02.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஔவையார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஔவையார்.

இந்த உலகினில் உள்ள ஞானவழிகளிலே உண்மையானதும் உயர்வானதும் உயர் ஞானமளிக்கவல்லதும் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உபதேசிக்கும் உயர்ஞான கொள்கைகளேயாகும். அரங்கனின் ஞானத்தோடு கூடிய தானதருமங்கள் இணைந்த வழிகாட்டல் உலகினில் வேறெங்கும் இல்லையப்பா.

தானதருமத்தினை உலக மக்களெல்லாம் காத்திட வேண்டியே தானதருமங்களை செய்திட தூண்டி அழைப்பு தந்து அன்பர்கள் கடைத்தேறிட உலக நலன் கருதி ஞானபூசைகளை நடத்தி தர்மத்தினை காப்பதுடன் கலந்த அன்பர்களையும் காத்து அருள் செய்து வழிநடத்துகின்ற அரங்கமகா தேசிகனைப் போல் இந்த உலகினில் வேறொரு குருவை காண முடியவில்லை, இனி காணவும் முடியாது.

அரங்கமகாதேசிகனை குருவாக ஏற்றுக்கொண்டு குருவெனும் அரங்கனின் அன்பில், குரு அரங்கன் அன்பெனும் குடையில் இருக்கின்ற சீடர்களே நீங்கள் ஏற்றுக்கொண்ட குரு அரங்கனின் எளிமையான தோற்றம் கண்டு, குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனை குறைத்து மதிப்பிட்டு அலட்சியப்படுத்திவிடாதீர்கள். குருராசன் அரங்கமகாதேசிகனார் எம்பெருமான் முருகப்பெருமானின் அவதாரம் ஆவார். முருகன் வேறு அரங்கன் வேறல்ல. ஞானிகள் நாங்களும் போற்றுகின்ற கலியுக மகா ஞானகுருவே அரங்கமகான். அத்தகைய உயர்ஞானி ஆறுமுக

அரங்கனை குறைவாக மதிப்பிட்டு அலட்சியம் செய்து குருராசன் அரங்கன் மூலமாக உங்களுக்கு எளிமையாக கிடைக்க இருக்கின்ற ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வாய்ப்பை இழந்து விடாதீர்கள், இழந்து பிறவிப் பெருங்கடலில் முடங்கி விடாதீர்கள்.

ஆதலினாலே ஆறுமுக அரங்கன் செய்கின்ற அறப்பணிகள் அனைத்தும் முருகப்பெருமானின் பணிகளாகும். அரங்கன் அழைப்பு முருகப்பெருமானே அழைப்பதாகும். ஆதலினால் முருகப்பெருமானே தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்து அருள்புரிந்து நிற்க அன்பரும் தொண்டரும் அவசியம் தினம்தினம் மறவாமல் பூஜைகளை செய்வதுடன் அன்னதான தொண்டுகளைச் செய்வதுடன், தர்மம் தளராமல் நடந்திட, தாராளமாய் பொருளுதவிகள் செய்தும் பொதுமக்களிடத்து அவர்களையும் புண்ணியவான்களாக ஆக்கும்விதமாக அரங்கனின் அன்னதானப்பணிக்கு நிதிவசூல் செய்து சேர்த்த நிதியை நேர்மைபட நடந்து செயல்பட்டு உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வருவிக்கப்பட்ட அவதார நோக்கமெல்லாம் வெற்றி காணும்படி, தடைகள் ஏதும் இல்லாமல், தொடர்ந்து அரங்கன் கட்டளைக்கு கீழ்ப்படிந்து தளராது செயல்பட்டுவர உலகினில் தருமபலம் பெருகிடும். ஆறுமுக அரங்கமகாதேசிகனார் தேடிக் கண்ட சீடர்களின் நம்பகத்தன்மை பெருகி வரும் காலங்களில் அரங்கமகானின் சீடர்கள் அரங்கன் கருணையினாலே ஞானிகளாகவும் ஆகி சிறப்படைவார்கள்.

–சுபம்–

ஒரு மனிதன் ஞானியாகிறான் என்றால், முருகப்பெருமானை நினைத்து இருபத்தேழாயிரம் ஆண்டுகள் தவம் செய்திருக்க வேண்டும். அப்போதுதான் முருகப்பெருமான் வாசி நடத்திக் கொடுப்பார். அவருக்கு பொருள்பற்று, பொறாமை, வஞ்சகம் இருக்காது, தொண்டர்களை மதிப்பார்கள், உலக மக்களை சகோதரராக எண்ணுவார்கள். ஒரு சிலருக்கு தவத்தின் காரணமாக காலதாமதமாவது நாட்டிற்கு சேவை செய்வதற்காகத்தான். இதில் நூற்றுக்கு எண்பது சதம் இளமையிலேயே சித்தி பெறுவார்கள். அதேசமயத்தில் ஒரு சிலருக்கு தவம் மேற்கொள்ளும் காலத்தில் உடல் நலிவு, பலகீனம் ஏற்படத்தான் செய்யும். இதை பண்பட்ட மக்கள் அறிந்து கொள்வார்கள். சாதாரண மக்களுக்கு புலப்படாது. அமைதியாக இருந்து அவர் செயல்பாட்டினை கவனிக்க வேண்டும். அவருடைய தன்மையை புரியாமல் அலட்சியப்படுத்தினால் முருகப்பெருமானின் கோபத்திற்கு ஆளாக நேரும்.

ஓங்காரக்குடிலில் முருகப்பெருமான் முதல், அகத்தீசர், நந்தீசர், திருமூலதேவர், மாணிக்கவாசகர், இராமலிங்கசுவாமிகள் போன்ற மகான்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருப்பார்கள்.

இங்கு வந்தவர்கள் வாழ்க்கையில் தோல்வி அடைந்ததில்லை!

– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.